


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன் சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணைய உறுப்பினர்கள் திரு. சி. செல்வராஜ் மற்றும் திருமதி. டி. ஜெயந்தி ராணி ஆகியோர்கள் முன்னிலையில், குழந்தைகள் உரிமைகள், குழந்தை பாதுகாப்பு தொடர்பான சீராய்வு மற்றும் நடைமுறை சிக்கல்கள் குறித்து, குழந்தைகள் தொடர்பாக பணிபுரியும் அனைத்துத்துறை சார்ந்த மாவட்ட அலுவலர்களுக்கான கலந்தாய்வு கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்ட அரங்கில் (09.11.2016) அன்று நடைபெற்றது.

செ.வெ.எண்: 790/ 2016 நாள்:10.11.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன் சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில்,**
**தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணைய உறுப்பினர்கள் திரு. சி.செல்வராஜ் மற்றும் திருமதி. டி. ஜெயந்தி ராணி ஆகியோர்கள் முன்னிலையில்,**
**குழந்தைகள் உரிமைகள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பான சீராய்வு மற்றும் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன் சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணைய உறுப்பினர்கள் திரு. சி. செல்வராஜ் மற்றும் திருமதி. டி. ஜெயந்தி ராணி ஆகியோர்கள் முன்னிலையில், குழந்தைகள் உரிமைகள், குழந்தை பாதுகாப்பு தொடர்பான சீராய்வு மற்றும் நடைமுறை சிக்கல்கள் குறித்து, குழந்தைகள் தொடர்பாக பணிபுரியும் அனைத்துத்துறை சார்ந்த மாவட்ட அலுவலர்களுக்கான கலந்தாய்வு கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்ட அரங்கில் (09.11.2016) அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணைய உறுப்பினர்கள் தெரிவித்தாவது:

மத்திய அரசின் குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம், மாநிலத்தில் குழந்தைகளுக்கெதிராக நிகழும் உரிமை மீறல்கள் தடுத்தல் மற்றும் பாதுகாத்தல் குறித்த பணியை தமிழ்நாடு முழுவதும் சிறப்பாக மேற்கொண்டுவருகிறது.

மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குழந்தைகளுக்கு எதிராக கொடுமைகள் ஏதேனும் ஏற்பட்டால் உடனடியாக மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவிப்பதோடு, சம்மபந்தப்பட்ட நபர்கள் மீது உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்கள்.

பின்னர், குழந்தைகள் சார்ந்து பணிபுரியும் அனைத்து துறைகளின் ஓராண்டிற்கான குழந்தைகள் நலன், பாதுகாப்பு மற்றும் உரிமைகள் தொடர்பான பணிகளின் மீதான விவரக்குறிப்புகள் குறித்து கலந்தாய்வு கூட்டம்

மற்றும் அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து சீரிய முறையில் இலக்கு நோக்கி பணியாற்றுவதற்கான செயல்திட்டம் குறித்த பல தீர்மானங்களும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. வெ. ஜெயகுமார், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி.எஸ். குமுதா , மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.உமா மகேஸ்வரி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி.பேச்சியம்மாள், மெட்ரிக் பள்ளி ஆய்வாளர் திரு.எஸ்.பாலா, மாவட்ட நன்னடத்தை அலுவலர் திரு.வெங்கட்ராமன், இளைஞர் நீதிக்குழும உறுப்பினர்கள் திரு.கிருஷ்ணமூர்த்தி, திருமதி.ஷர்மிளா பேகம், குழந்தைகள் நலக்குழு தலைவர் திரு.அப்துல் ஹகீம், மற்றும் உறுப்பினர்கள் திரு.ஆபிரகாம் நெல்சன் ஆசீர், திருமதி.மேரி பீனா, திரு.பன்னீர் செல்வம், அனைத்து மகளிர் காவல் ஆய்வாளர் மற்றும் ஆள்கடத்தல் தடுப்பு பிரிவு அலுவலர் திருமதி. கண்மணி ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகர்கோவில்.